திரு. எம். பூபதி: ஆன் எ பாயின்ட் ஆஃப் க்ளாரிபிகேஷன் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆஃப் க்ளாரிபிகேஷன் என்று இல்லை. பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று இருந்தால் சொல்லுங்கள்.

திரு. எம். பூபதி: தலைவர் அவர்களே, அங்கத்தினர்கள் எவ்வளவு நேரம் வரைக்கும் தங்கள் கையை உயர்த்திக்கொண்டேயிருந்தால் பேரவைத் தலைவரின் கவனத்தை ஈர்க்க முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை).

இந்திய அரசுக்கு திருப்பித்தரவேண்டிய கடன்கள்

*436 வினா.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திய அரசுக்குச் சேர வேண்டிய நடப்பு ஆண்டு கடனைத் திருப்பிச் செலுத்துவதற்குக் கால அளவினை மாற்ற மாநில அரசு கோரியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்கு இந்திய அரசு தந்துள்ள பதில் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மத்திய அரசுக்குச் சேர வேண்டிய இம் மாநிலக் கடன் தவணைத் தொகைகளை மாற்றியமைக்கும்படி மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தியுள்ளது.

(இ) மத்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

THIRU K. VINAYAKAM: Sir, will the Hon. Minister be pleased to state for the benefit of this House, the exact amount which we owe to the Centre under various categories also, when the loan was taken and when the grant was made; also, what is the total amount of interest that we have to pay them, also what exactly is the appeal made by the State Government to the Centre in regard to this matter and what exactly is the reply they have received from the Centre?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எத்தனை கேள்வி போடுவது?

திரு. கே. விநயகம்: நாலே நான்கு கேள்விகள் தான்! (சிரிப்பு)

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மாண்புமிகு உறுப்பினர் ஒரு பெரிய அறிக்கையே வைப்பதற்கான கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். சபாநாயகர் அனுமதித்தால் முழு விவரமும் சொல்லலாம். பொதுவாகச் சொல்ல வேண்டுமானால் 31—1—1969 முடிய 340 கோடி கடன் நாம் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இன்னும் அது குட்டிபோட்டால் இந்த 31-ம் தேதி முடிய 344 கோடிக்கு வரலாம்.

இந்த ஆண்டிலே 37 கோடி ரூபாய் நாம் அவர்களுக்குத் திருப்பித் தர வேண்டியதாக இருக்கிறது. பெறுகிற தொகை 36 கோடி ரூபாய்தான். இதற்காகத்தான் நாம் நிதிக் கமிஷனிடத்திலும், நவம்பர் மாதத்தில் பிரதமர் வந்திருந்தபோது அவர்களிடத்திலும் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. இன்னும் நம்முடைய கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

1970 மார்ச் 18]

திரு. அ. ஆறுமுகம்: இந்திய அரசிடம் இருந்து மாநில அரசு எந்த எந்த வகையில் கடன்களைப் பெற்றிருக்கிறது? இது வறட்சி, புயல் நிவாரணமாகப் பெற்ற கடனாக இருந்தால் அதை மத்திய அரசு தள்ளிவிட வேண்டும் என்று நமது மாநில அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: புயல், வெள்ளம், வறட்சியைப் பொறுத்தவரையில் ஒரு பகுதிதான் கிராண்டாகக் கொடுக்கப்படுகிறது, பாக்கி கடனாகவேதான் கொடுக்கப்படுகிறது. இப்போது வறட்சி நிவாரணப் பணிக்கு 14 கோடி கொடுத்துவிட்டதாகச் சொல்கிறார்கள். ஏறக்குறைய 4 கோடிதான் கிராண்டாகக் கொடுத்திருக்கிறார்கள். பாக்கி எல்லாம் கடனாகத்தான் வழங்கப் பட்டிருக்கிறது. கொள்கை அளவில் எல்லாவற்றையும் கடனாகவே கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம்.

திரு. நா. சௌந்தரபாண்டியன்: மத்திய அரசு கொடுத்த கடன்களைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்று மாநில அரசு கேட்பதுபோலவே, மாநில அரசு உள்ளாட்சிகளுக்குக் கொடுத்த கடன்களை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது வேறு. அனுமதிக்க முடியாது.

திரு. எஸ். இராமச்சந்திரன்: நம்மிடம் இருந்து வசூலிக்கிற வரிப் பணத்தை நமக்கே கடனாகத் தந்து, அதற்கு வட்டியும் பெற்று, திருப்பியும் கொடுக்கவேண்டுமென்று சொல்வது மார்வாரித்தனமாகாதா?

(சில உறுப்பினர்கள் எழுந்தார்கள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'மார்வாரித்தனம்' என்ற வார்த்தையை உபயோகிக்கக் கூடாது.

திரு. எஸ். இராமச்சந்திரன்: மாநிலங்களுக்குக் கடன் சுமை, அதிகரித்து வருகிறது என்று மற்ற மாநிலங்கள் எல்லாம் நிதிக்குழுவிடம் வற்புறுத்தி வருவது அரசுக்குத் தெரியுமா? தேசிய அபிவிருத்திக் கவுன்சில் நிதி வழங்குகிற முறையில் மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மாண்புமிகு உறுப்பினருக்கு மற்ற மாநிலங்கள் வற்புறுத்தி வருவது தெரிகிறது. இந்த அரசும் தான் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது. அதுவும் என்னுடைய பட்ஜெட் உரையிலேயே எல்லா மாநிலங்களுக்குமாக ஒரு டெட் கமிஷன் போடவேண்டும் என்று வற்புறுத்தி யிருக்கிறேன். பத்திரிகைகள் எல்லாமும் இந்தக் கருத்தை ஆதரித்து வலியு றுத்தி எழுதியிருப்பதையும் கனம் உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தஞ்சாவூர் மாவட்டத்திற்கு விவசாய அபிவிருத்திக் கழகம்

* 437 வினா.—திரு. ஆ. கு. சுப்பையா: மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில், விவசாய அபிவிருத்திக் கார்ப்பரேஷன் அமைக்க அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?

(இ) ஆம் என்றால், எத்தகைய ஆராய்ச்சிகள் நடத்தப்படும்? அதன் விவரங்கள் யாவை?